***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 114/2025 – P.W.1 (LW1)***

| | |
|---|---|
| *Name* | சுமதி |
| *Father/Husband's Name* | க/பெ.தங்கமணி |
| *Village* | லக்கணாம்பேட்டை |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 48 |

*1 முதல் 4* **எதிரிகள் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 16.03.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும்.

கடந்த 2021ம் வருடம் மாலை 05.30 மணியளவில் நான் வீட்டின் அருகே நின்றுகொண்டிருந்தபோது அங்கு ஒரு சிலருக்கிடையே தகராறு ஏற்பட்டது. நான் வேடிக்கை பாரக்க சென்றபோது நடந்த தள்ளுமுள்ளுவில் நான் கீழே விழுந்ததில் எனக்கு கையில் இரத்தக்காயம் ஏற்பட்டது. அதற்காக மன்னார்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். ஆஜர் எதிரிகளுக்கும், எங்களுக்கும் முன்விரோதம் இருந்ததால் சமபவ இடத்தில் அவர்கள் நின்றுகொண்டிருந்ததால் அவர்கள் தான் என்னை தாக்கியிருப்பார்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டேன்.

2. நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, BSA பிரிவு 157 ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலணைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எதிரிகளுடன் சமரசம் செய்துக்கொண்டு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் - சரிதான். நீதிமன்றத்தில் காட்டப்படும் சமரச மனுவில் நானும் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் - சரிதான். எதிரிகள் என் ஊர்க்காரர்கள் என்ற முறையில் சமரசம் செய்துக் கொண்டுள்ளேன் என்றால் - சரிதான். (**சமரச மனுவில் உள்ள எனது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2. போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 05.12.2021ம் தேதியன்று மாலை 05.30 மணியளவில் வீட்டின் அருகே நின்று கொண்டிருந்தபோது மன்னார்குடி மதுக்கூர் ரோட்டில் வசிக்கும் ஆஜர் 1 வது எதிரி மற்றும் 3 எதிரிகளும் எங்களுக்கும், ரமேஷ் என்பவருக்கும் இடையே இருந்த பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை தொடர்பாக என்னை தகாத வார்த்தைகளால் திட்டி, பீர் பாட்டிலால் என்னை வலது கையில் தாக்கி, கம்பால் அடித்து கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும், சம்பவம் குறித்து எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது எதிரிகள் எனது ஊர்க்காரர்கள் என்பதால் அவர்களுடன் சமாதானம் செய்து கொண்டு, அரசுத்தரப்பிற்கு எதிராகவும், எதிரிகளுக்கு சாதகமாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

*Sd/-J. Tamizhmurugan,*
*Judicial Magistrate No.I,*
*Mannargudi.*

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 114/2025 – P.W.2 (LW2)***

| | |
|---|---|
| *Name* | தங்கமணி |
| *Father/Husband's Name* | காமாட்சி |
| *Village* | லக்கணாம்பேட்டை |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *48* |

*1 முதல் 4* **எதிரிகள் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 16.03.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். அசா.1 எனது மனைவி ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும்.

கடந்த 2021ம் வருடம் மாலை 05.30 மணியளவில் எனது மனைவி வீட்டின் அருகே நின்றுகொண்டிருந்தபோது அங்கு ஒரு சிலருக்கிடையே தகராறு ஏற்பட்டது. எனது மனைவி வேடிக்கை பாரக்க சென்றபோது நடந்த தள்ளுமுள்ளுவில் அவர் கீழே விழுந்ததில் அவரது கையில் இரத்தக்காயம் ஏற்பட்டது. அதற்காக மன்னார்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார். சம்பவ தினத்தன்று வேலை விசயமாக வெளியூர் சென்றிருந்தேன். ஆஜர் எதிரிகளுக்கும், எங்களுக்கும் முன்விரோதம் இருந்ததால் சமபவ இடத்தில் அவர்கள் நின்றுகொண்டிருந்ததால் அவர்கள் தான் தாக்கியிருப்பார்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, BSA பிரிவு 157 ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலணைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 05.12.2021ம் தேதியன்று மாலை 05.30 மணியளவில் வீட்டின் அருகே எனது மனைவி நின்று கொண்டிருந்தபோது மன்னார்குடி மதுக்கூர் ரோட்டில் வசிக்கும் ஆஜர் 1 வது எதிரி மற்றும் 3 எதிரிகளும் எங்களுக்கும், ரமேஷ் என்பவருக்கும் இடையே இருந்த பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை தொடர்பாக அவரை தகாத வார்த்தைகளால் திட்டி, பீர் பாட்டிலால் அவரது வலது கையில் தாக்கி, கம்பால் அடித்து கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும், சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும், தற்போது எதிரிகள் எனது ஊர்க்காரர்கள் என்பதால் அவர்களுடன் சமாதானம் செய்து கொண்டு, அரசுத்தரப்பிற்கு எதிராகவும், எதிரிகளுக்கு சாதகமாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

*Sd/--J. Tamizhmurugan,*

*Judicial Magistrate No.I,*
*Mannargudi.*